[2014 பிப்ரவரி 17

*முற்பகல் 10-55*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. இரா. காமராஜ்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பணிகள் முழுமையாக நிறைவேறியவுடன் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆசியோடு கடை திறந்துவைக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா வரிசை எண் 57, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி. நாகராஜன், மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

**57—**

**கால்நடை மருத்துவமனை**

***20535—திரு. கே.பி. நாகராஜன்:**

*மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) மயிலம் தொகுதி, மயிலம் ஊராட்சி ஒன்றியம், நெடமோழியனூரில் புதிய கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*(அ) மற்றும் (ஆ) மயிலம் தொகுதியிலே, நெடிமோழியனூர் கிராமத்திலே, ஒரு கால்நடை மருத்துவமனை அமைக்கப்படுமா என்று உறுப்பினர் கேட்டிருக்கிறார். அங்கே கால்நடைத் துறையினுடைய விதிகளுக்குட்பட்டு, ஐயாயிரத்திற்கும் மேற்பட்ட கால்நடைகள் இருக்கின்ற காரணத்தினால், மனிதனுக்கு இணையாக கால்நடைகளுக்கும் மருத்துவம் பார்க்கவேண்டுமென்ற அம்மா அவர்களின் ஆட்சியினுடைய இலட்சியத்தின் அடிப்படையிலே (மேசையைத் தட்டும் ஒலி) அங்கே கால்நடைக் கிளை நிலையம் ஒன்று நிச்சயமாக அமைக்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

2014 பிப்ரவரி 17]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி. நாகராஜன்.

**திரு. கே.பி. நாகராஜன்:** கழகத்தினுடைய நிரந்தரப் பொதுச் செயலாளர், வணங்குதலுக்கும் போற்றுதலுக்கும் உரிய ஆராதனைக்குரிய தெய்வம், நான் வணங்கும் அன்னை, நடமாடும் மனித தெய்வம், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை இங்கிருந்தவண்ணம் அவர்களது மலர்ப்பாதம் தொட்டு வணங்குகிறேன். இங்கே புதிதாக உருவாக்கப்பட்டுள்ள மயிலம் சட்டமன்றப் பேரவைத் தொகுதியிலே, நான் கேட்பதற்கும் முன்பாகவே அந்த நெடிமோழியனூர் கிராமத்திலே கால்நடை பராமரிப்புத் துறையினுடைய கால்நடைக் கிளை நிலையம் அமைத்துத் தரும்படி ஆணை பிறப்பித்த அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் நன்றி, 'கோமாதா எங்கள் குல மாதா, குலம் காக்கும் நலம் யாவும் அரும் மாதா, எங்கள் அரும் மாதா', 'தன்னையே கொடுத்தாலும் வாழைக்கு ஈடு சம்சாரி வாழ்வுக்கு ஒரு பசு மாடு', (மேசையைத் தட்டும் ஒலி) 'தன்னையே கொடுத்தாலும் அதற்கேது ஈடு', 'அம்மாவே நீங்கள் நினைத்தது நாடு, அம்மா கோமாதா எங்கள் குல மாதா" (மேசையைத் தட்டும் ஒலி). என்று கூறி மாண்புமிகு அம்மா அவர்களின் கனிவான பார்வைக்கு என்னுடைய கோடானுகோடி நன்றி மலர்களை அம்மாவினுடைய பாதத்தில் சமர்ப்பித்து, நன்றியைத் தெரிவித்துக்கொண்டு அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 58, மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. குணசேகரன், மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

**58—**

## பேருந்து கூண்டு கட்டும் பிரிவு

***23064—திரு. ம. குணசேகரன்:**

மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—